Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.39/2023**

**2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 14 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 14 | தொழில் | - | மருத்துவர் |
| பெயர் | - | திருமதி.நித்யா | வட்டம் | - | நீலகிரி மாவட்டம் |
| க/பெ | - | திரு.சுபாஸ் | சமயம் | - | |
| கிராமம் | - | ஊட்டி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை | வயது | - | 32 /2025 |
| சாதி | - | | | | |

| | |
|---|---|
| நாள் ( Dated) : 13-08-2025 | |
| **நீதிமன்ற புள்ளி ( IN COURT POINT)** | |
| இடம் ( Venue) | - நீதிமன்ற காணொலி அறை. வால்பாறை |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | - தலைமை எழுத்தர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், வால்பாறை |
| இந்த வழக்கில் வழக்கறிஞர் | அரசுக்காக – S.P.ராமச்சந்திரன் LLM.APP Gr-1 |
| | எதிரிக்காக வழக்கறிஞர் ஆர்.ஆர்.பெருமாள், |
| **தொலைதூர புள்ளி (IN REMOTE PONIT)** | |
| இடம் ( Venue) | மாவட்ட நீதிமன்றம் நீலகிரி மாவட்டம் |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | திரு.வெங்கடேஸ் Assistant Programmer |
| சாட்சி ( Witness) | திருமதி.நித்யா (அ.சா.14) |

மாவட்ட நீதிமன்றம் நீலகிரி மாவட்டம், நீதிமன்ற காணொலி அறைக்கு வரவழைக்கப்பட்டு நீதிமன்ற காணொலி சாதனம் மூலம் விசாரணை செய்யப்படுகிறது.

**<u>13-08-2025</u>**

**(எதிரி ஆஜரில்லை )**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது நீலகிரி மாவட்டம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19-01-2023-ம் தேதி நான் வால்பாறை அரசுமருத்துவமனையில்

மருத்துவராக பணியில் இருந்தபோது 18 வயது நிரம்பிய அஸ்வின் த/பெ. ராஜன் என்பவர்அவரது நண்பரால் சிகிச்சைக்கு அழைத்துவரப்பட்டார். நான் அவரை விசாரித்தபோது 19-01-2023-ம் தேதி மாலை 06.00 மணிக்கு நான்கு நபர்கள் இரு சக்கர வாகனத்தில் சென்றபோது சிறுகுன்றா லோயர் டிவிசன் அருகே விபத்து ஏற்பட்டதாக கூறினார். நான் அவரை பரிசோதனை செய்தபோது அவரது இடது காலில் சிராய்ப்பு காயம் இருந்தது. அவருக்கு புறநோயாளியாக சிகிச்சையளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என சான்று வழங்கினேன். **(நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 19-01-2023-ம் தேதி மாலை 07.00 மணிக்கு சுரேஸ் என்பவரின் மகன் மகேஷ் என்பவர் அவரது நண்பரால் சிகிச்சைக்கு அழைத்துவரப்பட்டார். மகேஷ் சுயநினைவு இல்லாததால் நான் அவரது நண்பர்களை விசாரித்தபோது 19-01-2023-ம் தேதி மாலை 06.00 மணிக்கு நான்கு நபர்கள் இரு சக்கர வாகனத்தில் சென்றபோது சிறுகுன்றா லோயர் டிவிசன் அருகே விபத்து ஏற்பட்டதாக கூறினார்கள். நான் அவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு தலை, முகம், இடது கை முழுவதிலும், இடது பக்க வயிறு, வலது கை கால் ஆகியவற்றில் சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது. இடது பக்க வயிற்று பகுதியில் ரத்த கசிவு இருந்தது. மது வாடை இருந்தது. அவர் சுயநினைவு குறைவாக இருந்தது. வார்த்தைகள் தடுமாறின, அவரை பரிசோதித்தபோது வலி இருப்பதாக உணர்ந்தார். அவரது ரத்த அழுத்தம் மற்றும் ஆக்ஸிஜன் அளவு சீராக இல்லை. அவரை 07.15 மணிக்கு அவருக்கு மூச்சு தினரல் ஏற்பட்டு சுயநினைவு இன்றி காணப்பட்டார். அவரது ரத்தம் அழுத்தம் மற்றும் ஆக்ஸிஜன் ஆகியவற்றை பரிசோதிக்க இயலவில்லை. பின்பு 5 சைக்கிள் சீபிஆர் சிகிச்சை அளித்தும் பலன் இல்லை சுமார் 07.45 மணிக்கு அவர் இறந்துவிட்டார். **(நான் பதிவு செய்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

குடிபோதையில் இரு சக்கர வாகனத்திலிருந்து ஒரு நபர் தவறி விழுந்தால் மேற்கண்ட காயங்கள் ஏற்பட்ட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மகேஷ் என்பவரின் உடலை நான் பிணக்கூராய்வு செய்யவில்லை என்றால் சரிதான். நான் மகேஷ் உடலை பிணக்கூராய்வு செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.